# தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம்
# மற்றும்
# இந்திய வானிலை மையம் இணைந்து வழங்கும் வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை

## வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை-வேலூர் மாவட்டம்

(08.12.2016 முதல் 12.12.2016 வரை)

**கடந்த ஐந்து நாட்களில் நிலவிய வானிலை (02.12.2016 முதல் 06.12.2016)**

வேலூர் மாவட்டத்தில் கடந்த ஐந்து நாட்களாக வானம் மேகமூட்டத்துடன் காணப்பட்டது 44.0 மி.மீ அளவு மழை பெய்த்து. அதிகபட்ச மற்றும் குறைந்த பட்ச வெப்ப நிலை முறையே 25.0-30.0°C மற்றும் 21.0-23.0°C என்ற அளவில் இருந்தது. காற்றின் ஈரப்பதம் 65 முதல் 96 விழுக்காடு நிலவியது. காற்றின் வேகம் மணிக்கு 5-10 கிலோமீட்டர் அளவில் இருந்தது.

**அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு**

| தேதி | 08.12.2016 | 09.12.2016 | 10.12.2016 | 11.12.2016 | 12.12.2016 |
|---|---|---|---|---|---|
| **மேகமூட்டம்** | வானம் ஓரளவு மேக மூட்டத்துடன் காணப்படும் | வானம் ஓரளவு மேக மூட்டத்துடன் காணப்படும் | வானம் ஓரளவு மேக மூட்டத்துடன் காணப்படும் | வானம் ஓரளவு மேக மூட்டத்துடன் காணப்படும் | வானம் ஓரளவு மேக மூட்டத்துடன் காணப்படும் |
| **மழை பொழிவு (மி.மீ)** | 0.5 | 0 | 0 | 0 | 0 |
| **காற்றின் வேகம் கி.மீ/ மணிக்கு** | 6 | 6 | 6 | 6 | 6 |
| **காற்று வரும் திசை** | கிழக்கு | கிழக்கு | கிழக்கு | கிழக்கு | கிழக்கு |
| **வெப்பநிலை°C** | | | | | |
| **அதிகபட்ச வெப்பநிலை°C** | 29 | 29 | 29 | 29 | 29 |
| **குறைந்த பட்ச வெப்பநிலை°C** | 21 | 21 | 21 | 21 | 21 |
| **ஈரப்பதம்** | 75-85 | 75-85 | 75-85 | 75-85 | 75-85 |

**பண்ணையாளர்கள் அடுத்த ஐந்து நாட்கள் மேற்கொள்ள வேண்டிய வேளாண்மை மற்றும் கால்நடை மேலாண்மை முறை பற்றிய ஆலோசனை.**

1. 08.12.2016 அன்று இலேசான மழை பெய்ய வாய்ப்புள்ளது.
2. காலையில் பனி உலர்ந்த பின்பு கால்நடைகளை மேய்ச்சலுக்கு அனுப்புவதன் மூலம் குடற்புழு தாக்கத்தினை தவிர்க்கலாம்.
3. அடர்தீவன உற்ப்பத்திக்கு தேவையான மூலப்பொருட்களை மழையில் நனையாமல் பாதுகாப்பதால் அப்லாடாக்ஸின் எனும் நச்சு உற்பத்தியை தடுக்கலாம்.
4. இளம் கன்றுகள் மற்றும் ஆட்டு குட்டிகளை மழை மற்றும் குளிரின் தாக்கத்திலியிருந்து பாதுகாக்குமாறு கேட்டுக்கொள்கிறோம் மேலும் கொட்டகையின் தரை பகுதியின் தேவையான அளவு கூளத்தை பரப்பி மற்றும் மின்விளக்கு அமைத்து தேவையான வெப்பத்தை அளிக்கலாம்.
5. கால்நடைகளின் கொட்டகையின் அருகில் தண்ணீர் தேங்காதவாறு பார்த்துக்கொள்வதன் மூலம் ஒட்டுண்ணீகளால் பரவும் நோய்களை தடுக்கலாம்.

**வேளாண் மற்றும் தோட்டக்கலை பயிர்களுக்கான சிறப்பு வானிலைக்கேற்ப மேலாண்மை முறைகள்**

**முக்கிய பயிர்கள்:** நெல், கரும்பு மற்றும் வேர்க்கடலை

1. நெற்பயிரில் தண்டுத்துளைப்பான் தாக்கம் காணப்படுவதால் அப்பயிறுக்கு மோனோகுரோடோப்பாஸ் அல்லது குயினால்பாஸ் அல்லது புரபோனாப்பாஸ் என்ற மருந்தை ஒரு எக்டேர்ருக்கு ஒரு லிட்டர் என்ற அளவில் தெளிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.
2. நெற் பயிரில் குலை நோயைக் கட்டுப்படுத்த ஒரு லிட்டர் தண்ணீரில் ஒரு கிராம் அல்லது ஒரு மி.லி கார்பன்டாசிம் 50 WP அல்லது டிரைசைக்ஸோல் 75 WP அல்லது மெட்டாமினோஸ்ட்ரோபின் 20 SC அல்லது அசாக்ஸிஸ்ட்ரோபின் 25 SC என்ற அளவில் தெளிக்கவும்.